# கொழும்பில் நேற்று தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)
அரசாங்க நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதை ஆட்சேபித்து நேற்றுக் கொழும்பில் இலங்கை மின்சார சபைக் காரியாலயத்திற்கு முன்பு 'ரெலிக்கொம்' நிறுவன ஊழியர்கள் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 27 இதழ் 371
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-2-1995

வடபகுதியில்

## புனர்வாழ்வுப்பணி 2 வாரத்தில் ஆரம்பம்

(கொழும்பு)
வடபகுதியில புனர்வாழ்வுப் பணிகள் அடுத்த இருவாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக பொறியியலாளர் குழு வடபகுதி செல்லவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும்

(2-ம் பக்கம் பார்க்க)

## தேசிய கல்விக் கொள்கை இன்று வெளியிடப்படும்

(கொழும்பு)
புதிய தேசியக் கல்விக் கொள்கைத்திட்டம் இன்று வெளியிடப்படவுள்ளது.
கல்வித்துறையில் பல மாற்றங்களை கொண்டு வருமுகமாக தேசியக் கல்வி ஆணைக் குழு இதனை வகுத்துள்ளது. இதன் தலைவர் பேராசிரியர்

(2ம் பக்கம் பார்க்க)

# ★ இனப்பிரச்னை தீர்விற்கான அரசியல் திட்டம் பெரும்பாலும் வகுக்கப்பட்டுவிட்டதாம்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

[கொழும்பு]
இனப்பிரச்னை தீர்விற்கான அரசியல் திட்டம் பெரும்பாலும் வகுக்கப்பட்டுள்ளதாகவும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருமுகமாக சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு பரந்த அளவில் தாம் அதிகாரப் பாவலாக்கத்தை வழங்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா அரசியல் தீர்விற்கான முழு விபரங்களையும் தெரிவிக்க மறுத்துள்ளார்.

வெளிநாட்டு நிருபர்கள் நேற்று கொழும்பில் அளித்த மதிய போசன விருந்து வைபவத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்;
வடபகுதியில் யாழ். குடாநாட்டில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்ட பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள். நெடுஞ்சாலைகள், பொது நூல்நிலையம் ஆகியவற்றை அரசு மறுசீரமைக்கும்.
கடந்த ஆகஸ்ட் மாத

(2ம் பக்கம் பார்க்க)

## அடுத்த யூன் மாதத்தின் பின் மீண்டும் பொதுத் தேர்தல்

(கொழும்பு)
நாட்டில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறக்கூடுமென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.
கொழும்பில் வெளிநாட்டு நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாடாளுமன்றில் தமது கட்சியின் பெரும்பான்மைப் பலத்தை அதிகரிக்கும் முகமாக விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறக்கூடும் என்றும் பெரும்பாலும் இத்தேர்

(2ம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவினதும் அரசினதும் செல்வாக்கு சரிந்து வருகிறது

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது பொ. ச. மு அரசும் மக்கள் மத்தியில் பெருமளவில் செல்வாக்கை இழந்துவருவதாக 'ராவய' ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.
'ராவய' பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் திரு. ஐவன் சந்திரிகாவின் ஆட்சியை மிகக் கடுமையாக விமர்சித்துள்ளார்.
அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்;—
திருமதி சந்திரிகாவின் அண்மைக்கால நடவடிக்கைகள், அவர் அரசியலின் உண்மைத் தன்மையை புரிந்துகொள்ள

(4ம் பக்கம் பார்க்க)

தமிழீழ

## நிர்வாக சேவையின் தொழில் வங்கி

(யாழ்ப்பாணம்)
தமிழீழத்தினுள் கல்வி பயின்று தொழில் இன்றி இருப்பவர்களை பதிவுசெய்து, தமிழீழத்தில் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு தகுதியின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொழில்வங்கி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இத்தொழில வங்கி 25ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளது.
இதன் செயற்பாடானது முறைசார் வேலையற்றோர்களை தகுதியின் அடிப்படையில் நிரல்படுத்தி ஒழுங்கு

(4ம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டது

– சிதம்பரமும் அமைச்சரானார் –

(புதுடில்லி)
இந்திய மத்திய அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அடுத்த கட்ட விஸ்தரிப்பு விரைவில் நடைபெறுமென்றும் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.
இதன்படி திரு. அஜித்சிங், திரு. பூட்டாசிங், திரு. மாதவராவ் சிந்தியா ஆகியோர் கபினெட் அமைச்சர்களாக

(4-ம் பக்கம் பார்க்க)

## பல்கலை.மானிய ஆணைக்குழு தலைவர் ராஜினாமா!

(கொழும்பு)
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் இந்திரகீர்த்தி சிறிவீர தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
கடந்த திங்கட்கிழமை தனது பதவியை திடீரென ராஜினாமா செய்த இவர் தனது ராஜினாமா கடிதங்களை கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரத்னவுக்கும், ஜனாதிபதியின் செய

(4ம் பககம் பார்க்க)

## சந்திரிகா அடுத்த மாதம் இந்தியா செல்வார்

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா அடுத்த மாதம் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளார்.
இவர் இந்தியாவுக்கு எப்பொழுது செல்வார் என்பது குறித்து இரு நாடுகளும் பேசி முடிவு செய்யும் என கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் நேற்று தெரிவித்தது.
ஜனாதிபதியாக பதவியேற்ற பின் அவரது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயம் இதுவாகும். —சி

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## விடுதலைப் புலிகள் தமக்கு குறிவைக்கிறார்களாம்

சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் தமக்குத் தொடர்ந்தும் குறிவைப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று வெளிநாட்டு நிருபர்களுடனான சந்திப்பின்போது தெரிவித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: இவ்விடயம் குறித்து விடுதலைப் புலிகளுக்குத் தாம் கடிதம் எழுதியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.
இதேவேளையில் அலரிமாளிகையில் அண்மைக்காலத்தில் வெடிமருந்துப் பொருட்கள் பாதுகாப்புப் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டதை தொடர்ந்து ஜனாதிபதி சந்திரி

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### Maths English 95

ஆண்டு 6 இருந்து O/L வரை ஆரம்பத்திலிருந்து விசேடமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85 சிவன் கோவிலடி, மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1394)

### விசேட கூட்டம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக, மாணவர்கள், பழைய மாணவர்கள் உறுப்பினர்கள் பங்குபற்றும் விசேட கூட்டம் 14-2-95 செவ்வாய் காலை 10-00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். தொடர்புடையவர்கள் தவருது சமூகம் தரவும். — செயலாளர். (சி-1395)


விசர் நாய் கடி

## தடுப்பூசி மருந்து தட்டுப்பாடு

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் விசர் நாய் கடி தடுப்பு ஊசி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இவை பயன்படுத்தப்பட விருப்பதாகவும், புதிதாக வரும் நோயாளிகள் வேறு வைத்தியசாலைக்குச் செல்லும் அவல நிலையும் ஏற்பட்டுள்ளது. —160

## தபால்களை அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு வெளியேஉள்ளஇடங்களுக்கும் கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படவிருக்கும் தபால்களை நாளை 11ம் திகதி சனிக்கிழமை கப்பல் மூலம அனுப்புவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ் பிரதம தபால் அதிபர் தெரிவித்துள்ளார்

கடிதங்களை அனுப்ப விரும்பும் பொதுமக்கள். தங்கள் கடிதங்களை, இன்று10ம் திகதி தபாலில் சேரக் கூடியதாக தமது வதியிடங்களுக்கு அண்மையிலுள்ள அஞ்சலகங்களிலோ அல்லது நாளை 11ம் திகதி காலை 9 மணிக்கு முன்னதாகயாழ் பிரதம அஞ்சலகங்களிலோ தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு வேண்டப்படுகின்றனர்கள்.

தேசியகல்வி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லக்ஷ்மன் ஜெயதிலக புதிய கொள்கை அறிக்கையை கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரனவிடம் இன்று கையளிப்பார்.

புதிய கல்விக் கொள்கை தொடர்பாக தமது கருத்துக்களை தெரிவிக்க இன்று அவகாசம் வழங்கப்படும். இதன்பின் இத்திட்டம்தேவையான திருத்தங்களுடன் ஜனாதிபதியிடம்கையளிக்கப்படும்.

அடுத்த

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தல் எதிர்வரும் யூன் மாதத்திற்குப் பின் நடைபெறலாமெனவும் கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஒரு ஆசனத்தை மட்டுமே கூடுதலாகப் பெற்று பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தமை தெரிந்ததே.

இதேவேளை தற்போதைய அரசியல் சட்டப்படி ஒரு வருட காலத்துக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-சி)

# கிழக்கு படை முகாம்கள் குறித்து ஆட்சேபனை!

(கொழும்பு)

போர் இடை நிறுத்தம் அமுலில் இருக்கின்றபோதும் கிழக்கு மாகாணத்தில் படை முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது,

மட்டு. மாவட்ட எம். பி. திரு. ஜோசப் பரராசசிங்கம் படை முகாம்கள் பலப்படுத்துவது குறித்து தனது ஆட்சேபனையை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களிலும், ராணுவ முகாம்களிலும் புதிய பாதுகாப்பு அரண்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது படையினரின் தொகையும் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிழக்கின் சில பகுதிகளில் வழமை போல் சுற்றி வளைப்புகள், கைதுகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. -ரி

# புலமைப் பரிசில் மாணவர் ஜப்பான் சுற்றுலா

(கொழும்பு)

கடந்த ஆண்டு நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மிகக்கூடிய சித்திகளைப் பெற்ற மாணவர்கள் ஜப்பானுக்கான இரு வார கால சுற்றுப்பயணம் ஒன்றை ஜூலை மாதம் மேற்கொள்ளவுள்ளனர்,

கம்பியூட்டர் மூலம் நடைபெற்ற மேற்படி தெரிவில் சிங்கள மாணவர்கள் 05 பேர் தமிழ் மாணவர்கள் 02 பேர், முஸ்லிம் மாணவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், இவர்களுடன் பெண் ஆசிரியர் ஒருவரும் பயணம்செய்யவுள்ளார். க-ரி

# சமய பாடவிதானத்தில் விரைவில் மாற்றம்

(கொழும்பு)

ஆண்டு-1 முதல் க. பொ. த (சாதாரணம்) வரை சமய பாட விதானம் மாற்றம்செய்யப்படவுள்ளதாக கல்வித்திணைக்களத்தை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:- அன்றாட வாழ்க்கை முறைகள் தர்மக கொள்கைகள், ஒழுக்கநெறிகள் ஆகியவற்றை பேணும் வகையில் பாடவிதானங்கள் மாற்றியமைக்கப்படும். முதல் கட்டமாக வட மத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டின் தற்போதைய தேவைக்கேற்பக் கல்விப் போதனைகள் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் இலத்திரனியல், மின்னியல் போன்ற தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-சி)

# பத்திரிகையாளருக்கு காப்புறுதி திட்டம்

(கொழும்பு)

பத்திரிகை துறை சார்ந்தோர் உட்பட வெகுஜன தொடர்புத் துறையினை சார்ந்தோருக்கு புதிய காப்புறுதி திட்டம் ஒன்றை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிமுகப் படுத்தியுள்ளது

இதன்படி காப்புறுதி செய்யப்பட்ட வெகுஜன தொடர்பு துறையை சார்ந்த ஒருவர் ஆகக்கூடியது ஏழு லட்சம் ரூபாவையும் ஆகக் குறைந்தது 50 ஆயிரம் ரூபாவையும் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து, கண்பார்வையிழப்பு, அங்கவீனம், மருத்துவ சிகிச்சை மற்றும் மரணச் சடங்கு போன்றவைகளுக்கு இழப்பீடு வழங்கபடும்,

இதற்கான ஆகக் குறைந்த காப்புறுதிக் கட்டணம் 75 ரூபாவாகும். இதன் மூலம் 50 ஆயிரம் ரூபாவைப் பெற முடியும். ஆகக் கூடிய காப்புறுதிக் கட்டணம் 350 ரூபாவாகும். இதன் மூலம் 7 லட்சம் ரூபாவை இழப்பீட்டுத் தொகையாக பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-

# பாடசாலை வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்

(உடுவில்)

''பாடசாலை எல்லைக்குள் இருக்கும் சகல பௌதீகவளங்களும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக உபயோகப் படுத்தி உச்சப் பயன்பாட்டை பெற வேண்டும். வளங்களில் இருந்து கிடைக்கும் வருமானங்களும் அவை எவ்வாறு மாணவர்களுடைய தேவைகளுக்காக உபயோகிக்கப்பட்டன என்றும் கணக்குகள் எழுதப்பட்டு பதிவேடுகள் பேணப்பட வேண்டும்.''

இவ்வாறு உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை வளங்கள் வீண் விரயமாகக் கூடாது. மாணவர்களின் கற்றல் நிகழ்வு நோக்கி அவை பயன்படுத்தப்பட வேண்டும். பாடசாலை மாணவர்களின் குடிநீர்வசதிக்காக கிணறுகள் இறைக்கப்பட வேண்டும். பாடசாலை சூழல் சுத்தம் பேணப்பட வேண்டும்.

பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் போன்ற வைபவங்களுக்கு வளங்களை விரயம் செய்யக் கூடாது அதிகாரிகளுக்கு மாலை போடுவது தவிர்க்கப்பட வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் மாலை ஐந்து மணிக்கு முன்பாக முடிவடைய வேண்டும். பாடசாலை நாட்களில் போட்டிகளை நடத்தி மாணவரின் கற்றலுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது எனவும் அவர் அங்கு வலியுறுத்திக் கூறினர். 109-ரி

# அமிர் கொலை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது

]கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் கொலை வழக்கின எதிரியான வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் என்பவருக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் வழங்கியிருந்த தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்து அவரை விடுதலை செய்தது.

1989-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி கொழும்பில் திரு. அ. அமிர்தலிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

இக்கொலை தொடர்பாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் கடந்த நான்கு வருடங்களாக தடுப்புக் காவலில வைக்கப்பட்டிருந்தார். [கே-ரி]

# இன்று

(யாழ்ப்பாணம்)

தலையாளி' கொக்குவில் ஸ்ரீ ஞான வைரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 10ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். -162

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் திறப்பு விழா இன்று 10ம் தேதி பொமமைவெளியில் காலை 10-30 மணிக்கு நடைபெறும்.

6 0

(யாழ்ப்பாணம்)

சகல கல்வி மேம்பாட்டுக் கழக ஆசிரியர்களும் தமது தை மாத உதவு தொகையினை இன்று 10ம் தேதி வெள்ளிக்கிழமை பி-ப- 2-30 மணிக்கு தத்தமது கல்விக் கோட்ட பணிமனைகளில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் மு. ச. சமூக நிலைய அரங்கில் இன்று மாலை கலை இரவு நடைபெறவுள்ளது.

இக்கலை இரவில் 'துரோகத்தின் பரிசு' 'குமுறும் எரிமலை' 'விடிவைத தேடும் பறவைகள்' ஆகிய நாடகங்கள் இடம்பெறவுள்ளன. -ரி

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படும் தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வாராந்த நிகழ்வில் இன்று மாலை திரு மணிசுந்தரம் பிரபாகரனின் இசைக் கச்சேரி இடம்பெறும். அறிமுக உரையை திரு. திருமுருக கதிர்வேலன் நிகழ்த்துவார். (ரி)

## வெதுப்பக திறப்புவிழா

(வட்டுக்கோட்டை)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அராலி மேற்கு, வடக்கு கிளையினரால் (கிளை (இல.22) அராலி கொட்டைக் காட்டுப்பகுதியில் அமைககப்பட்ட வெதுப்பகத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6-30 மணிக்கு சங்கத்தலைவர் திரு. வை. சேதுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிமேற்கு பிரதேச செயலரும் மேலதிக உதவி அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டி இந்த வெதுப்பகத்தைத் திறந்து வைப்பார். (139)

வடபகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்; சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் பற்றி கவனத்திற்கெடுக்கப்படாமல் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஆனல் இப்பணிக்குத் தேவையான உபகரணங்களைக் கொண்டு செல்ல வீதிப்போக்குவரத்து திறக்கப்படவேண்டும் என்றும் அல்லாவிடில் அவை கடல் மார்க்கமாக கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவித்துள்ளார். -க-சி

இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் விடுதப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிததேன். அவர்களும் புனரமைப்பு வேலைகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அரசியல் தீர்விற்கான நகல் திட்டமொன்றை அரசு பெரும்பாலும் பூர்த்திசெய்துள்ளது. இதுதொடர்பான கலந்துரையாடல்கள் விரைவில் ஏனைய அரசியல கட்சிகளுடனும் விடுதலைப் புலிகளுடனும் நடத்தப்படும். சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாகவும் திருப்தியாகவும் உள்ளன. எனினும் அம்முயற்சிகள் குறித்து அபரிதமாக கூறுவதற்கில்லை.

ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு உடன்பாடு நல்ல முறையில் அமுல் படுத்தப்படுகிறது. அது மிகவும் திருப்திகரமாகவுள்ளது.

அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நாலாம் கட்டப் பேச்சுக்கள் விரைவில் நடாத்தப்படும். இனத் தகராற்றை தீர்த்து வைப்பதற்கான அரசியல் விவகாரங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு அரசு அக்கறையுடன் உள்ளது.

மோதல் தவிர்ப்புக்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் எதிர்ப்பாக இருக்கிறார்கள் என்ற செய்திகளில் எதுவித உண்மையுமில்லை. பாதுகாப்பு படையினரின் பூரண ஒத்துழைப்பு இவ்விடயத்தில் கிடைத்து வருகிறது.

நாட்டில் கிழக்குப் பகுதியில் படையினரின் கட்டிப்பாட்டிலுள்ள பகுதியில் விடுதலைப் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வ இந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

இதுவரையில் புலிகள், அரசு நடாத்த விரும்பும் பேச்சுக்கான திகதியை குறிப்பிட தயக்கம் காட்டி வருகின்றனர். ஆனல் விரைவில் உடன்பட்டு அவர்கள் செயற்படுவார்கள் என நினைக்கிறேன். இதற்கிடையில் புலிகள், பேச்சுக்கள் தொடங்கு முன்னரே தங்களுக்கு தேவையான மிதந்த சலுகைகளைப் பெற முயற்சிக்கின்றனர்.

இச்சலுகைகளில் முக்கியமாக வடபகுதியில் உள்ள இரண்டு பிரதான இராணுவ முகாம்களை அகற்றுமாறு புலிகள் கேட்டுள்ளனா. எனினும் அதற்கு அரசு இணக்கம் தெரிவிக்கவில்லை.

தற்போது அரசு தயாரித்துள்ள அரசியல் பேச்சுவார்த்தைத்திட்டம் அதிகப்படியான பல மாற்றங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் எனக்கு பெருமளவு நம்பிக்கையுள்ளது. இதுபோலவேசமாதான முயற்சியில் நாட்டின் வடக்கு-தெற்கிலும் நம்பிக்கை மலர்ந்துள்ளது. இதே மாதிரியாக சீராக இம் மாபெரும் பணி முன்னேறவேண்டும்.

ஆனல் இப்பிரச்னைக்கு தீர்வுகாண இத்தனை நாட்களாக காத்திருந்தவர்கள் 'மந்திரவாதி மாயக்கோல் கொண்டு வித்தை நடத்துவது போல ஏதேனும் நடைபெறும் என எதிர்பார்த்தால் அவர்கள் கனவு காண்பவர்களாகவே இருப்பார்கள் எனவும் கூறினர். -சி

**மணிவாக்கு**

நம்பிக்கை வைத்து ஒருவனைப் பின்தொடரும்போது நீ அவசரக்காரனாக இருந்தால் அதுவரையில் பட்ட கஸ்டம் வீணாகிவிடும். இலக்கை அடையும் வரையில் கொடுமைகளை தாங்கிக் கொள்வதே வெற்றிக்கு வழி.

- கண்ணதாசன்

## ஆனையிறவிலுள்ள

# 4 கோடி ரூபா பெறுமதியான உப்பை கொழும்பு எடுத்துச் செல்ல முயற்சி

(கொழும்பு)

ஆனையிறவு உப்பளத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள நாற்பதாயிரம் மெ. தொன் உப்பை கொழும்பிற்குக் கொண்டு வருவதற்கான ஒழுங்குகளை இலங்கை உப்புக் கம்பனி மேற்கொண்டு வருகிறது.

இராணுவத் தாக்குதல்கள் காரணமாக ஆனையிறவு உப்பள வேலைகள் 1990ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டன.

அண்மையில் ஆனையிறவு உப்பளத்தை நேரில் சென்று பார்வையிட்ட உப்புக் கம்பனி உபதலைவர் திரு. அசோக்குமார் கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அச்செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது அவர் கூறியதாவது: தற்பொழுது உப்பளத்திலுள்ள உப்பு நான்கு கோடி ரூபா பெறுமதியானது என்று கூறினார்.

ஊழியர்களின் சம்பளத்திற்கென உப்புக் கம்பனி மாதாந்தம் எட்டு லட்சம் ரூபாவை ஒதுக்க வேண்டியுள்ள போதிலும் இந்த உப்பளங்களில் உற்பத்தி எதுவும் மேற்கொள்ளப்படாதிருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

அங்குள்ள அலுவலகக் கட்டிடங்களை ஆனையிறவு முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரே பயன்படுததி வருகிறார்கள்.

தற்பொழுது கொழும்புக்கு எடுத்து வரப்படவிருக்கும் உப்பை கொழும்பிலுள்ள ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்னர் விற்பனைக்கு விடப்படும் என்றும் அவர் கூறினார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் உப்புக் கம்பனியின் பணிப்பாளர் நெவில் பெர்ணண்டோ, பிரதி பொது முகாமையாளர் உபாலி குணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ரி)

## நமது நோக்கு

### புதுமையான கொள்கையா?

''வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவாக 2400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதேசமயம் இனப்பிரச்னைக்குத் தீர்வு சமாதானமாகக் காணப்படும் என அரசு கூறியுள்ளது. இது மிகவும் புதுமையானதாக உள்ளது!'' என பி. பி. ஸி. விமர்சித்துள்ளது.

முன்னைய அரசு இராணுவத் தீர்வில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டதன் விளைவு என்ன?

யுத்தச் செலவை - அதன் பகக விளைவை - பல பொருளாதார நிபுணர்களும் அரசியல்வாதிகளும் பெருங் கருணையோடு பேசி வந்தார்கள்.

வருடச் செலவு, மாதச் செலவு, நாளாந்தச் செலவு, நிமிடச் செலவு என்றெல்லாம் கணக்கிட்டு மக்களை வியப்பிலாழ்த்தினார்கள்!

இன்றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைகூட அண்மையில் கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் காட்டிய கணிதத் திறமை என்ன?

''மகாவலித் திட்டத்திற்குச் செலவானது ஆக மொத்தம் 5900 கோடி. ஆனால் - கடந்த ஆண்டு மாத்திரம் போருக்குச் செலவான தொகை 2900 கோடி!'' - இப்படி ஒப்பிட்டார் அவர்.

ஆனால் - கூற மறந்தது என்ன தெரியுமோ?

போருக்காக - மறைமுகமாகப் போன தொகை, போரின் விளைவால் பாழாகிப் போன நாட்டு வளம் ஆகியவற்றைக் கணக்கிட்டுக் கூறவில்லை.

இப்படி எல்லாம் கூறிய அரசுதானா வரவு செலவுத் திட்டத்தில் இவ்வாண்டுக்கு 2400 கோடியை ஒதுக்கியுள்ளது?

இங்குள்ள மக்கள் மாத்திரமல்ல, உலகத்தவரே அரசின் புதுமையான கொள்கைபற்றி அறியாமல் இருப்பார்களா?

பிரதி நிதி அமைச்சரின் உரையின்படி பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சில ஆடம்பரப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளன. வரவேற்க வேண்டியது தான்!

ஆனால் - பாதுகாப்புச் செலவை ஈடு செய்ய மேலும் சில வரிகள் போடப்படலாம் என்ற செய்தியும் வந்துள்ளது.

ஏற்கனவே - பொது மக்களும் தொழிலாளர்களும் வாழ்க்கைச் செலவால் பாதிக்கப்பட்டுக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வரிகள் மூலம் - பாதுகாப்புச் செலவை ஈடு செய்ய எண்ணினால் மேலும் கிளர்ச்சிகளுக்கு வித்திடும் செயலாகவே முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்!

## பலதும் பத்தும்

### வில்சன் நோய்

அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு. உதாரணம் வேண்டுமோ? உடலுக்கு மிக அவசியமான தாமிரச் சத்து அளவிற்கு மீறினால் கெடுதல்தான். எப்படி?

வழக்கமாக ... மேலதிக தாமிரம் மலம், சிறுநீர் மூலம் வெளியேறும். ஆனால் .. சில வேளைகளில் இப்படி வெளியேறுவது தடைபட்டு விடும். அபூர்வமாக ஏற்படும் இதனையே வில்சன் நோய் என்கிறார்கள்.

இதனால் ... கல்லீரல். எலும்பு, தசை ஆகியவற்றில் தாமிரச் சத்து தங்கி நிற்கும். இருக்கட்டுமே என்று விட்டு விட்டால் . கல்லீரல் சுருங்கிச் செயலிழக்கும்; சிறு நீரகம் பாதிக்கப்பட்டலாம். வில்சன் நோயின் முக்கிய அறிகுறி .. கண்களிலுள்ள கார்னியாவைச் சுற்றி வட்டமாக ஒரு வளையம் தோன்றுமாம்!

— மயூரன்

## இராசி பலன்

10-02-1995

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு தை 27)

தசமி பி. ப, 2-27 வரை: மிருகசீரிடம் முழுவதும் சித்த யோகம். இராகு காலம் பகல் 11-04 முதல் 12-34 வரை: கபவேளை காலை 6-34 முதல் 8-04 வரை:

மேடம்: கருத்து முரண்பாடு, கடன் சுமை, அலைச்சல்.

இடபம்: பயனுள்ள சந்திப்பு. மனக்களிப்பு, பிறர் உதவி.

மிதுனம்: மனவிரக்தி, தைரியக் குறைவு, காரிய தாமதம்.

கடகம்; வாதத் திறமை, சுபகாரியச் செலவு, கௌரவம்.

சிங்கம்; அதிகாரிகள் பாராட்டு, தொழில சிறப்பு, பணவரவு.

கன்னி: குதர்க்க வாதம், சகோதர பகை, அகால உணவு.

துலாம்: எதிர்பாராத துயர், இனசன வெறுப்பு. யோசனை.

விருச்சிகம்: முயற்சிவெற்றி, நண்பர் மகிழ்ச்சி, குடும்ப சுகம்.

தனுசு: உயர்ந்த நிலை, அவசரப்போக்கு, வீராவேசம்.

மகரம்: வாய்த் தகராறு, பணக் கஷ்டம், தொழில் பகை.

கும்பம்: ஏமாற்றப்படல், மனவேதனை, பயணக்களைப்பு.

மீனம்: தொழில் யோசனை, சமாதான முயற்சி, தியாகம்.

**ஜோஸ்யர்**

வளத்தின் செழிப்பு வறுமையின் அழிப்பு

## ஆடை ஏற்றுமதிக்கான

# அமெரிக்க உடன்படிக்கையில் இலங்கைக்கு பல சலுகைகள்

[கொழும்பு)

அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதி உடன்படிக்கை பற்றிய பேச்சு வார்த்தைகளில் இலங்கை பல சலுகைகளை பெற்றுள்ளது,

அமைச்சர்கள் சி. வி. குணரட்ண, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் அமெரிக்க நிர்வாக உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியதன் காரணமாக இந்த உடன் படிக்கைகளுக்கான அரசியல் சாதக நிலை உருவாகியுள்ளது.

திரு. லக்ஷ்மன் கதிர்காமர் பொதுசன அரசின் கொள்கைகள் பற்றியும் சமாதான முயற்சிகள் பற்றியும் அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கி கூறியிருந்தார்.

இலங்கை அமைச்சர்கள், அதிகாரிகள், தனியார் துறையினர் நடத்திய பேச்சுவார்த்தையில் ஆடைகள் உடு துணி வகைகளுக்கான ஏற்றுமதி கோட்டாக்களை அதிகரிக்க முடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

10 வருடகாலத்திற்கு ஏற்றுமதி கோட்டாக்களும் வேறு சலுகைகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய விலைமட்டத்தில் 10 ஆண்டுகளில் 60 கோடி 70 லட்சம் ரூபாய் பெறுமதியான அதிகரித்த அளவு ஆடைகளை அமெரிக்க சந்தைக்கு அனுப்ப வழி பிறந்துள்ளது. (கே-ரி)

## அறிவுக் களஞ்சிய போட்டி

(யாழ்ப்பாணம்)

''அறிவுக களஞ்சியம்'' சிறப்புப் பொது அறிவுப் போட்டியின் வினடி வினப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 14-ம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ், வைத்தீஸ்வராக் கலலூரியில் நடைபெறவுள்ளது. [ம]

## வெள்ளி விருந்து

# கண்ணப்பனாரின் அன்பை சுவைத்த பெருமான்

இன்று கண்ணப்ப நாயனார் திருநாள்.

பொத்தப்பி நாட்டின் உடுப்பூர் வேடுவர் சேரி அதிபதி நாகன். அவன்மனைவி தத்தை. முருகப் பெருமான் திருவருளால் திண்ணனார் அவதரித்தார்.

குலஒழுக்கத்தின்படி திண்ணனார் வில்வித்தை கற்கும் விழா எடுத்தார்கள்.

திண்ணனார் குலமரபுமுறைப்படி வேட்டைக்குப் புறப்பட்டார். ஒரு பன்றியைத் துரத்திச் சென்ற திண்ணனார் காளத்தி அப்பரைக் கண்டார். சிவபெருமானுடைய திருவருள் நோக்கம் பெற்றதனால் அன்புப் பிழம்பானார்.

சிவகோசரியாரின் ஆகம பூசைக்குப் பின் திண்ணனார் அன்புப் பூசை செய்தார்.

திண்ணனாரின் அன்பு சிவகோசரியாருக்கு அசிங்கமாகப் பட்டது. இறைவனிடத்தில் செருப்படியும் நாயடியும் வெந்த இறைச்சியும் எலும்புமான அனுசிதம் யார் செய்தாரோ என விண்ணப்பித்தார்

காளத்தி அப்பர் சிவகோசரியாரின் கனவில் வந்து அருளியவாறு திண்ணனாரின் அன்பைக் காண அந்தணர் ஒளித்திருந்தார்.

திண்ணனார் அண்ணலாரின் அன்புப் பூசைக்குரிய அனைத்தையும் தேடிக் கொண்டு ஓடோடியும் வருகிறார்.

பெருமானின் வலக்கண்ணில் உதிரம் பாயக் கண்டார்! மருந்துகள் பிழிந்து வார்த்தார். ஒன்றாலும் புண்ணீர் நிற்கக் காணார். கலங்கினார். தெளிவடைந்தார் பின்னர் — 'ஊனுக்கு ஊன்' என்னும் உரை நினைவிற்கு வந்தது. அம்பு எடுத்துத் தம்கண் வாங்கி அப்பினார் முதல்வர் கண்ணில்!

செங்குருதி நிற்கக் கண்டார். களிப்படைந்தார். பின்னர்...

கண்ணப்பனாரின் அன்பைச் சுவைத்த பெருமான் மற்ற இடத்திருக்கண்ணில் குருதி பாய இருந்தார்.

''இதனுக்கு அஞ்சேன். மருந்து கை கண்டேன். இன்னும் உண்டு கண்'' என்று மகிழ்ந்தார் கண்ணப்பனார்.

தம் கண்ணை எடுத்தால் பெருமானின் கண்ணைக் காண வேண்டுமே என்று பெருமானின் திருக்கண்ணிடமாகத் தமது இடக்காலை ஊன்றி உள் மகிழ்ச்சியோடு ஒரு பகழி கொண்டு திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர்.

''கண் அப்ப நிற்க'' என்னும் திருவாக்கோடும் சிவபிரான் திருக்கரத்தால்பிடித்த போது சிவகோசரியார் கண்டனர். நான்முகன்முதலாயுள்ள வானவர் வளர்பூமாரிபொழிந்தார்கள். வேதங்கள் ஆரவாரித்தன. கண்ணப்ப நாயனார் சிவகதி அடைந்தனர்.

— சிவ சண்முகவடிவேல்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-10

வெள்ளி இரவு

| | |
|---|---|
| 08-01 | கலை மஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் அறிமுகமாவது ''இசை பாடும் திரிகோணம்'' ஒலிப்பதிவ நாடா. அதனை அடுத்து சிறுகதை- வ. கற்கண்டு எழுதிய 'போட்டி'' சிறுகதையை தொடர்ந்து கவிதை- ந. கிருஸ்ணா எழுதிய ''வல்லமையே வாழ்வு'' |
| 08-25 | கணப்பொழுது- போராளி இ. தமிழரசன் எழுதிய ''மேஜர் பிரசாத்'' |
| 08-30 | செய்திகள் |
| 08-40 | அரசியல் அரங்கம்- வே. பாலகுமாரன் எழுதிய ''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ'' |
| 08-50 | வாத்திய கானம் |
| 09-00 | இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

1995-02-11

சனி காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீர வணக்கம் |
| 07-15 | நீங்கள் கேட்டவை |
| 07-30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகைச் செய்திகள் |
| 07-40 | நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி |
| 08-00 | காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-02-10

வெள்ளி மாலை

| | |
|---|---|
| 05-01 | சிந்தனைச் சிதறல் |
| 05-02 | எழுச்சி கீதம் |
| 05-10 | புதியவை |
| 05-15 | கணநேர காவியங்கள் |
| 05-30 | மண்ணின் குரல்- ''நாங்கள் கெதியா முன்னேறி விடுவோம்'' தனிநடிப்பு |
| 05-40 | நேயர் கடிதம் |
| 05-45 | வெற்றிச் சுவடுகள் |
| 06-00 | சிந்தனைக்கு சில விஞடிகள |
| 06-20 | நாடகம்-தாவையூரான் எழுதிய 'ஞானம் பிறந்தது'' |
| 06-15 | விளையாட்டு செய்திகள் |
| 06-20 | என் தெரிவு |
| 06-30 | மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

யாழ். மாவட்டத்தில்

# கணக்காய்வாளர் பரீட்சையில் ஐவர் சித்தி

(மானிப்பாய்)

கணக்காய்வாளர் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐவருக்கு இம் மாதம் முதல் யாழ். மாவட்டத்திலேயே பணிபுரிவதற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் கொழும்பில் நடைபெற்ற இப்பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த ச கமலரசனி, கு. பிரபாகரன் இ. சாயீசன். சி. குகன், இ முருகதாஸ் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் நால்வருக்கு யாழ் செயலகத்திலுள்ள கணக்காய்வாளர் அலுவலகத்திலும் மற்றொருவருக்கு யாழ் மாநகரசபை அலுவலகத்திலும் பணி புரிவதற்கு கணக்காய்வாளர் திணைக்களத்தினால் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன

71-சி

# மன்னார் தீவிலுள்ள சகல அகதி முகாம்களையும் மூட உத்தரவு

(மன்னார்)

மன்னார் தீவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள சகல அகதி முகாம்களையும் மூடுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து மன்னார் முதல் தலைமன்னார் வரையுள்ள கிராமங்களில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1990க்குப் பின் மன்னார் தீவிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமிழகம் சென்றிருந்தனர் தற்போது தமிழகத்திலிருந்து இவர்கள் நாடு திரும்பிய போதும் பாதுகாப்பின்மை காரணமாகவும் தொழில் இன்மையாலும் இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்லாமல் அகதிமுகாம்களில் இருந்து வருகின்றனர்.

—சி

# உலக பௌத்த அமைப்பு தலைவர் பிரபாவுக்கு கடிதம்

(கொழும்பு)

சிறு சிறு கருத்துவேறுபாடுகளும் சம்பவங்களும் சமாதானத்திற்கான பயணத்திற்கு தடைகற்களாக அமையக்கூடாது என உலக பௌத்த சகோதரத்துவ அமைப்பு புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதமொன்றில தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

நாட்டின் அனைத்து பிரிவினரும் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சமாதானத்தை விரும்பும் தன்பகுதி மக்கள் உங்களை நோக்கி தமது கரங்களை நீட்டுகிறார்கள். நீங்களும் சமாதானத்தை நோக்கி உறுதியான அடியை எடுத்து வைப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

இந்தக் கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விடுதலைப்புலிகளின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்டுள்ளது.

—கே-சி

நாளை தமிழீழ

# கல்வி மேம்பாட்டு பேரவை பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டில் நடத்தப்பெற்ற 5ம், 8ம், 11ம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழீழ முதநிலைத் தேர்வு, தமிழீழ இளநிலைத் தேர்வு, தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு ஆகியவற்றில் தேசிய கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தமிழீழகல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் வண.பிரான்சிஸ் யோசப் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், யாழ். கல்வி வலயம் 1ன் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி யாழ். கல்வி வலயம் 2ன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, பேராசிரியர் வ. ஆறுமுகம், காலாநிதி து வி. ஜெயகுலராஜா, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

சி

# வாக்குறுதி எதனையும் அரசு நிறைவேற்றவில்லை

ஹமீத் கூறுகிறார்

(கொழும்பு)

தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வருமுன்னர் அளித்த வாக்குறுதிகள் வரவு-செலவுத் திட்ட யோசனைகள் மூலம் நிறைவேற்றப்படவில்லையென முன்னாள் கல்வி, உயர் கல்வி அமைச்சர் ஏ.சி. எஸ். ஹமீது தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஜனாப் ஹமீத் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்: பலமான பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைகள் எதுவும் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

கடந்த வருடத்தில் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றம் தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் சுட்டிகாட்டப்படவில்லை. ஏற்றுமதி துறையைப் பலப்படுத்தாமல் வேலையில்லாப் பிரச்னையை தீர்ப்பது சாத்தியமற்றது; வெளிநாட்டை முதலீட்டு ஊக்குவிப்பது குறித்து வரவு-செலவுத்திட்டத்தில் ஆலோசனைகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து முன்னைய அரசாங்கம் கடன் பெற்றுக்கொண்டதை தற்போதைய அரசாங்கம் ஏன் தொடர்ந்து கடைப்பிடிக்கிறது என்றும் அவர் கேள்வி எழுப்பினர்.

-க-சி

தமிழகத்தில்

# காங்கிரஸ்-அ.தி.மு.க விரைவில் இணையலாம்?

(சென்னை)

தமிழகத்தில் ஆளும் அ. தி. மு. கழகமும், இந்திராகாங்கிரஸ் கட்சியும் இணையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தமிழக மாநில தொழில்துறை அமைச்சர் எம். சின்னசாமி தெரிவித்துள்ளார்.

நாகபட்டினத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட முதல்வர் ஜெயலலிதா, மேற்படி கருத்தானது திரு. சின்னச்சாமியின் கருத்தே தவிர அ. தி. மு. க வின் கருத்தல்லஎன்றார்

இரு கட்சிக்கும் இடையில் இணைப்பு ஏற்பட வாய்ப்பு இல்லையெனவும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

எனினும் நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்களின் தகவல்களின்படி இரு கட்சிகளும் இணையக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

—க-சி

# கடல் நர்த்தகியில் கடிதங்கள் அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அடுத்த வாரப் பிற்பகுதி முதல் பருத்தித்துறைக்கும்-திருகோணமலைக்குமிடையே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கும் பயணிகள் கப்பலான ''கடல் நர்த்தகியில்' (Sea Dancer) யாழ். கடிதங்களை எடுத்துச்சென்று திருமலையில் ஒப்படைப்பதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளதாக யாழ் பிரதம அஞ்சல் அதிபர் திரு. சி. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சேவையினைக் கடந்த ஆண்டிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கியிருந்தனர்,

'கடல் நர்த்தகி' யில் திருமலை வரை எடுத்துச் செல்லப்படும் கடிதங்கள் அவை பெறப்படுகின்ற தினத்திலேயே திருமலையில் இருந்து கொழும்புக்கு தரை மார்க்கமாக அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளை வெளியூர்க் கடிதங்களை திருமலை ஊடாக ''கடல் நர்த்தகி'' யில் பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்.

(சி)

தமிழீழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் இதனால் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள பல சிரமங்களிலிருந்து வேலையற்றோரை பாதுகாப்பதற்கும் அதிருப்திகளைக் குறைப்பது இதன் நோக்கம் ஆகும்.

தொழில் வங்கியில் பதிவு செய்வதற்கு பதிவு செய்வதற்கான அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும். வருங்காலத்தில் இவ்வத்தாட்சிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் வேலைவாய்ப்பு வழங்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அரச திணைக்களம், கூட்டுத்தாபன, கூட்டுறவு நிறுவனங்களின் நேர்முகப்பரீட்சையின் போது ''வேலை வங்கி பதிவு அட்டை' விசேட கவனத்தில் கொள்ளப்படும்.

எனவே வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் தங்களுடைய தகமைக்கேற்றவாறு தொழில் வாய்ப்புகளைபெறும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்கு தமிழீழ நிர்வாகசேவையின் மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் தொழில் வங்கியில் தங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பதிவு செய்வதற்குத் தேவையான மூல ஆவணங்கள் வருமாறு; பாடசாலை விடுகைப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகமைக்கான சான்றிதழ், தொழில் பயிற்சிச் சான்றிதழ், குடும்ப பதிவு அட்டை, வேலையற்றிருப்பதை உறுதிப்படுத்திய சான்றிதழ், வேறு விசேட ஆவணம் என்பனவாகும்.

[சி]

இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும், திரு. ப. சிதம்பரம், திருமதி ஊர்மிளா பேங் பட்டேல், திரு. மதன் சிங் ஆகியோர் இணை அமைச்சர்களாகவும் நேற்று பதவியேற்றனர்.

தொழிலாளர் துறை இணையமைச்சராக இருந்த பி. ஏ. சர்மாவும், ஜவுளித்துறை இணை அமைச்சராக இருந்த வெங்கடசாமியும் கபினற் அமைச்சர்களாக பதவிஉயர்த்தப்பட்டனர்.

தற்போதை அமைச்சரவை எண்ணிக்கை 97 ஆகும்.

க-சி

கொழும்பில்

(1-ம் பக்கத தொடர்ச்சி)

நடத்தினர்.

பெரும் கோஷங்களை எழுப்பித் தொழிலாளர்கள் தமது கடும் ஆட்சேபத்தை தெரிவித்தனர். முன்னைய அரசாங்கம் அரச நிறுவனங்களை தனியாருக்கு வழங்கும் கொள்கைக்கு எதிராக வே கடந்த தேர்தலில் அரச நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்கள் ஐ. தே. க'வுக்கு எதிராக வாக்களித்தனர் என்றும் பேரணியில் கலந்துகொண்ட பல ஊழியர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

பொதுசன முன்னணியினர் சமர்ப்பித்த வரவு.செலவுத் திட்டத்தில் பல அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படும் என்று அறிவிக்க பட்டதற்கு எதிராகவே இவர்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் இறங்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

-ம-சி

பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லர் திரு. கே. பலபத்த பெண்டிக்கும். அனுப்பிவைத்துள்ளார.

இவரது ராஜினாமாவுக்கான காரணம் எதுவும தெரிவிக்கப்படவில்லை.

—சி

விடுதலைப்புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவுக்கு பாதுகாப்பு பெருமளவு டலப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவரது பாதுகாப்பு வியூகமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

-க.சி

சந்திரிகாவினதும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

வில்லை என்பதையே காட்டுகிறது.

சந்திரிகாவின் சகல முயற்சிகளுக்கும் நாட்டு மக்கள் முழு ஆதரவை வழங்கியிருந்த போதும் அவர்களின் எதிர்பார்ப்பில் ஒரு சிறு பகுதியையாவது அவரால்நிறைவேற்ற முடியவில்லை. இதனால் இவரதும் கட்சியினதும் செல்வாக்கு மக்கள் மத்தியில் வேகமாக வீழ்ச்சியடைந்து வருகிறது.

இனப்பிரச்னை தீர்வு குறித்து தமிழ். சிங்கள மக்கள் இவருக்கு முழு ஆதரவை தெரிவித்திருந்தபோதும் இவ்விடயத்தில் அரசின் கொள்கை என்ன என்பது குறித்து இது வரை அவரால் எதுவுமே வெற்றிகரமாக செய்ய முடியவில்லை. இது அவரது இயலாமையையே தெளிவாக காட்டுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

— சி

ராஜீவ் கொலைவழக்கு

# ஜெயின் கமிஷன் முன் சேஷன், சுவாமி

(புதுடில்லி)

இந்திய தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன், ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி ஆகியோரை ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிக்கும் ஜெயின் கமிஷன் முன் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணியசுவாமியை அடுத்த மாதம் 7-ம் திகதியும், தேர்தல் ஆணையாளரை 8-ம் திகதியும் ஆஜராகுமாறு மேற்படி ஆணைக்குழு நீதிமன்ற ஆணையை அனுப்பி வைத்துள்ளது.

(க-சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Pos Lanka under Licence Number B/16336/B-